★ பக்கங்கள் 6 விலை சதம் 40

இன்று (6-7-79)

வரணியூரான் குழுவினரின்

சண்டியன் சின்னத்தம்பி

(நகைச்சுவை நாடகம்)

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

மாலை 7-00 மணி

(வானொலி நடிகர்கள் அறிவிப்பாளர்கள் நடிக்கிறார்கள்)

# ஈழநாடு
# The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/8948/78

மலர்: 21 ஆனி: 22 ஷஃபா: 10 இதழ்: 144

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 6-7-79

நயினை நாகபூசணி

அம்பிகை அடியார்களே!

உங்களின் வசதிக்காக எமது சாப்பாட்டு அறை ஒன்றை அங்கு நிறுவியுள்ளோம் என்பதை தங்களுக்கு மிகவும் அன்புடன் அறியத் தருகின்றோம்.

கிருபா கிவ்ற் கவுஸ்

46, பெரியகடை, யாழ்ப்பாணம்

அம்மன் கோவிலடி, நயினாதீவு.

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS RECEIVED 1979-7- PERIODICALS DIVISION ★ LIBRARY ★

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS RECEIVED 1979-7- PERIODICALS DIVISION ★ LIBRARY ★

### லேடி லங்கோர் நிறுவன ஆதரவில்

# தனியார்துறை ஊழியருக்கு
# கடன் வழங்கும் சபைகள்

## இலங்கையிலும் ஆரம்பிக்க முடிவு

[கொழும்பு]

தனியார்துறைகளிலும் கூட்டுத்தாபனங்களிலும் தொழில் புரியும் குறைந்த வருமானம் பெறும் ஊழியர்களுக்கு உதவும்பொருட்டு கடன் வழங்கும் சபைகள் அமைக்கப்படவிருக்கின்றன. லேடி லங்கோர் நிதி நிறுவனத்தின் ஆதரவில் இக்கடன்சபைகள் நிறுவப்படும்.

லேடி லங்கோர் நிறுவனத்தின் நிர்வாக நம்பிக்கையாளர் திரு எல்பர்ட் சில்வா இத்தகவலை நேற்று பத்திரிகை நிருபர்களிடம் வெளியிட்டார். கடன் வழங்கும் சபைகள் பொறுத்தே சம்பந்தப்பட்ட ஊழியர்களின் விருப்பத்தைப்

6-ம் பக்கம் பார்க்க

### யாழ். பழைய மார்க்கட் கட்டிடம்

## மூன்று புதிய கடைகள் எரிந்து நாசம்

### பொலிஸ் அதிபர் ஸ்தலத்திற்கு விரைந்து உதவினர்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பழையமார்க்கட் பகுதியில் கட்டப்பட்ட கடைகளில் நேற்றுமுன்தினம் இரவு தீப்பிடித்ததால் மூன்று கடைகள் எரிந்துள்ளது. இதனால் சுமார் 20.000 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

வெற்றிலை பாக்குக் கடைகள் வரிசையில் என் வி என் கணபதிப்பிள்ளைக்குச் சொந்த

(6-ம் பக்கம் பார்க்க)

## ஸ்கைலாப் வியாழனன்று காற்று மண்டலத்தில் பிரவேசிக்கும்

ஹூஸ்டன், ஜூலை 6

விண்வெளியிலிருந்து பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கும் அமெரிக்க 'ஸ்கைலாப்' விண்வெளி நிலையம், வரும் வியாழக்கிழமையன்றுதான் பூமியின் காற்று மண்டலத்துக்குள் ஊடுருவுமென்று அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிநிலைய விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

மணித்தியாலத்துக்கு 2,2000 மைல் வேகத்தில் வந்துகொண்டிருக்கும் இது, உடைந்து சிதறும்போது 4,000 மைல் நீளமும், 100 மைல் அகலமும் கொண்ட பிரதேசத்தைப் பாதிக்குமென்று கருதப்படுகின்றது.

இந்தியாவின் விஞ்ஞானிகள் நேற்று வெளியிட்ட ஒரு தகவலின்படி இந்தியாவையும், அதன் அருகில் உள்ள நாடுகளையும் இதன் பாதிப்பு 20ல் ஒருபங்கே சாத்தியமென்றும் அதனால் இந்த நாடுகளைப் பாதிப்பதென்பது துர்லபமே என்று கருதப்படுகிறது.

ஸ்கைலாப் பாதிப்பு, ஐரோப்பா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளையே பாதிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாக இருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

ஸ்கைலாப் பூமியில் விழுவதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னர்தான் அது விழுமென்பதுபற்றி திட்டவட்டமாகக் கூறமுடியுமென்று அவர்கள் அறிவித்துள்ளனர். அது தெரிந்ததும் மேலும் நான்கு மணிநேரம் விஞ்ஞானிகளால் தாமதிக்கச் செய்யமுடியுமாம்.

## "கோரிக்கைகளை ஏற்றபின்னரும் வேலைநிறுத்தம் செய்வது நியாயமற்றது"

### உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபை அறிக்கை

[உடுப்பிட்டி]

"உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் வேலை நிறுத்தம் நியாயமற்றது. ஊழியர்களின் சகல கோரிக்கைகளையும் வழங்க இயக்குநர்சபை இணக்கம் தெரிவித்த பின்னரும் நொண்டிச் சாட்டுகளை முன்வைத்து, ஊழியர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது விசனத்திற்குரியது" என்று உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர்சபையினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தம் செய்துள்ளார்கள். பாவனையாளர்களின் நிலையை உணர்ந்த இயக்குனர்கள் உடன் சபையைக் கூட்டி அவர்கள் கேட்டுக் கொண்ட சகல கோரிக்கைகளையும் உடனடியாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

"விசேடபடியான ஐம்பது ரூபாவை இயக்குநர்சபை கூட்டுறவு இலாகாவின் ஆலோசனைப்படி கூட்டுறவுஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபத்திற்கமைய 1979ம் ஆண்டு ஆனி முதல் வழங்குவதாகவும் தை மாதம் முதல் நிலுவையாகவிருக்கும் பணத்தை 31-7-79 முடிவடைய நடக்கவிருக்கும் எண்பார்வையை கருத்தில் எடுத்து தீர்மானிப்பதாகவும் முடிவு செய்யப்பட்டது. கூட்டுறவு உதவி ஆணையாளர் (யாழ்ப்பாணம்) மேற்படி சங்கத்திற்கு நேரில் வந்து நடந்த விடயங்களை ஆராய்ந்த பின்னர் தொழிலாளர் பிரதிநிதி

(6-ம் பக்கம் பார்க்க)

செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த

ஆனிப் பொங்கல்

9-7-79 திங்கட்கிழமை இரவு நடைபெறும்

2953

### வவனியா மாவட்ட எல்லை நிர்ணயம்

## ஜனாதிபதிக்கு அமெரிக்கா - லண்டன் தமிழர் சங்கங்கள் கண்டனம்

[கொழும்பு]

வவனியா மாவட்டத்துடன் அனுராதபுரத்தின் மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்க்கும் அரசாங்கத்தின் செயலைக் கண்டித்து அமெரிக்காவிலுள்ள ஈழம் தமிழர் சங்கம், லண்டனிலுள்ள தமிழர் ஒருங்கிணைப்புக்குழு ஆகியவை இலங்கை ஜனாதிபதிக்கு தந்திகள் அனுப்பியிருக்கின்றன.

வவனியா மாவட்டத்துடன் மேலும் மூன்று உதவி அரசாங்கப் பிரிவுகளைச் சேர்க்கும் உங்கள் நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது தமிழர்களின் தேர்தல் தொகுதி பிரதிநிதித்துவத்தின் அடிப்படை மனித உரிமையையே மறுக்கும் செயலாகும். இதன் காரணமாக சிங்கள தமிழ் மக்களுக்கிடையில் உறவுகள் பாதிக்கப்படும். இதற்கு உங்கள் அரசும் நீங்களும் மாத்திரமே பொறுப்பேற்க வேண்டும் என்று அமெரிக்காவிலுள்ள ஈழம் தமிழர் சங்கம் அனுப்பியுள்ள தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோன்ற கண்டனத் தந்தியொன்றை லண்டன் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளது. அரசின் இந்த நடவடிக்கையை உலகம் கவனித்துக் கொண்டிருக்கிறதென்றும் உலகத் தலைவர்கள் அனைவருக்கும் இத்தந்தியின் பிரதிகள் அனுப்பப்படுவதாகவும் அத்தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்ற கண்டனத் தந்தியொன்றை தமிழர் ஒருங்கிணைந்த குழுவின் சார்பில் திரு. வைகுந்தவாசன் அனுப்பியுள்ளார்.

திரு. வைகுந்தவாசன் முன்

(6-ம் பக்கம் பார்க்க)

## காசிதம்பதிகளுக்கு யாழ். நகரில் இன்று வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

கவிஞர் காசிஆனந்தனுக்கும் செல்வி சி. சரோஜினி தேவிக்கும் இன்று நண்பகல் தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவிலில் திருமணம் நடைபெறவிருக்கிறது.

இன்று மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் தலைமையில் மணமக்களுக்கு வரவேற்புவிழா நடைபெறவிருக்கிறது.

கலைஞர்களின் நாதஸ்வர இசையும், தலைவர்களின் வாழ்த்துரையும் இடம்பெறவிருக்கின்றன. [ஈ]

## பெருமாள் கோவிலில் இன்று கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளுக்கு இன்று மகாகும்பாபிஷேகமும் இன்று காலை 10 மணிக்கு நாவோத்ரசகஸ்ர சங்காபிஷேகமும் இரவு திருவிழாவும் நடைபெறும். இரவு ஸ்ரீ வேங்கடேசா வீதிவலம் வருவார்.

பகல் 12 மணிக்கு ராஜகோபுர முன்மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா நடைபெறும். [ஈ]

## வரி விளம்பரம்

### தேவை

பாதுகாவலர்கள் தேவை. ஓய்வு பெற்றவர்களும் வரலாம். சனிக்கிழமை முதல் திங்கட்கிழமை வரை காலை 10 மணிக்கு நற்சாட்சிப்பத்திரங்களுடன் தெல்லிப்பழை தபாலகந்தோருக்கு அருகாமையிலுள்ள பாதுகாப்புச் சேவை அலுவலகத்திற்கு நேரில் வரவும். 2960

புல்டோ, கச்சரன் அலவா வேலைகளில் அனுபவம் உள்ள பெண்களும் வேலை பழகுபவர்களும் உடன் தேவை. 6-ந் திகதியில் இருந்து வேலைக்கு ஆட்கள் சேர்த்துக்கொள்ளப்படும் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்திற்கு நேரடியாக தொடர்புகொள்ளவும். பெப்சி சோடாகொம்பனி, 45, அம்பலவாணர்றோட், (அத்தியடி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில்) அத்தியடி, யாழ்ப்பாணம். 2966

அலுமேனிய உருக்கு தொழிற்சாலைக்கு வேலை செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் உடன் ஆட்கள் தேவை, வேலை பழகுபவர்களும் தேவை. விபரங்களுக்கு விரார் உருக்கு தொழிற்சாலை, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய். 2970

### விற்பனைக்கு

கச்சேரி கிழக்கு புகையிரத வீதி, புளியங்குளம் ஸ்ரேசனுக்கு அண்மையில் 5 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விலை 12,000/- விபரங்களுக்கு: மகேசுவரன், 19, சந்தானமாதா வீதி, அரியாலை. 2958

மூன்றரை மாத சிவப்பு இன கோழிக்குஞ்சுகள் 500 விற்பனைக்கு உண்டு. விலை 22/50. பொன். தர்மபாலன், 104, பலாலி வீதி, யாழ்ப்பாணம். போன்: 7423. (2965)

மல்லாகம் நாற்சந்தியிலிருந்து 200 யார் வடக்கே காங்கேசன்துறை வீதியில் மேற்குப்புறமாக 9½ பரப்பு வீடு கட்டக்கூடிய காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தரகு இல்லை. V. வேலாயுதம், உடுவில் தெற்கு, சுன்னாகம். 2967

நல்ல நிலைமையிலுள்ள 5 ஸ்ரீ 9000 தொடர் 75 C C லம்பிறட்டா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: 46, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். 2957

### பயிற்சி

விஷேட 3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 10-07-1979 ஆரம்பமாகவுள்ளது இன்ஸ்ரிரியூட் ஒவ் இன்ஜினியரிங் ரெக்னொலஜி, 11/B, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2962

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

அளவெட்டி காலஞ்சென்ற வாதவூரர் லோகாதரன் பெண் சசிகலா என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் அளவெட்டி வெற்றிவேலு சுந்தரமூர்த்தி

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 38

எதிராக

1. வெற்றிவேலு சுந்தரமூர்த்தி பெண் விசாலாட்சி
2. வாதவூரர் லோகாதரன் இருவரும் அளவெட்டி

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்

நீதிமன்றக்கட்டளைப்படி
**மூ. நல்லலிங்கம்,**
பதிவாளர்.

1979-ம் ஆண்டு ஆனி மாதம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

என்னால் வரையப்பட்டது
**செ. இராமலிங்கம்,**
மனுதாரின் சட்டத்தரணி
2954

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## கேம்பிறிட்ஜ் கல்வி நிலையம்

44, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

க. பொ. த. (உயர்தரம்)

### பகல் நேர வகுப்புகள்

நடைபெறுகின்றன.

தூயகணிதம் பிரயோக கணிதம்

### A. பத்மநாதன்

தாவரவியல், விலங்கியல்,
இரசாயனம், பௌதீகம்

விரிவுரையாளர்களால் நடாத்தப்படும்

### ஆரம்பம் 2-7-79

2926

விபரங்கட்கு:
நிர்வாகி.


### புங்குடுதீவு கிராமாட்சி மன்றம் கேள்வி விளம்பரம்

புங்குடுதீவு கிராமாட்சி மன்ற விசேஷ ஆணையாளரால் பின்வரும் வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் அங்கீகரிக்கப்பட்ட கட்டுறவு/ கிராம அபிவிருத்தி/சனசமூக சங்கங்களிடமிருந்து 25-07-79-ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. மத்தி அம்மன் வீதி கல்லிட்டு தார் ஊற்றுதல்
2. அம்பலவாணர் வீதி கல்லிட்டு தார் ஊற்றுதல்
3. கலைவாணி வீதி கல்லிட்டு தார் ஊற்றுதல்
4. வல்லன் சிவஞானம் வீதி கல்லிட்டு தார் ஊற்றுதல்

24-07-79-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-30 மணி வரை செவ்வாய், வியாழக்கிழமைகளில் பிணைப்பணமாக ரூபா 50/-ம் பத்திரப்பணமாக ரூபா 25/-ம் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் பிணைப்பணம் ரூபா 50/- செலுத்தவேண்டியதில்லை.

ஏனைய விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

கே. ரி. சம்பந்தர்,
விசேஷ ஆணையாளர்.

கிராமாட்சி மன்ற அலுவலகம்,
புங்குடுதீவு,
04-07-79. 2963

மு. சபாநாதன்,
சட்டத்தரணியும் நொத்தாரிசும்,
"மகேந்திரம்",
வட்டுக்கோட்டை.

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சுந்தரலிங்கம் பெண் இராசலட்சுமி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்
இ. சீ. சுந்தரலிங்கம்,
திருநெல்வேலி வடக்கு.

மனுதார்

மரண சாதன நியாயாதிக்கம்) இல: 3457

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு ஆடி மாதம் 13-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்.

1979-ம் ஆண்டு ஆனி மாதம் 21-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.
2961

# யாழ். கல்வி வட்டார அபிவிருத்திச் சங்கம்

யாழ்ப்பாணக் கல்வி வட்டாரத்தின் 29 பாடசாலைகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய கூட்டமொன்று வாட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ் மகேஸ்வரஐயர் தலைமையில் யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. திரு எஸ். மகேஸ்வரஐயர் தமது உரையில், "பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள், தற்போது பாடசாலை அபிவிருத்திச்சங்கம் என்ற பெயரில் இயங்குகின்றன. அதன் அங்கத்துவம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. யாழ் கல்வி வட்டாரம் சில சிறப்பான அம்சங்களை உள்ளடக்கியது. இங்கு இந்து கத்தோலிக்க, கிறிஸ்தவ இஸ்லாமிய சமயப் பாடசாலைகளுடன் தனியார் பாடசாலைகளும் உள்ளன. எனவே இவ் வட்டாரத்திலிருந்து மாவட்டத்திற்கு தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள் இப்பரந்த சமுதாயத்தினையும் பிரதிபலிப்பது சிறப்புடையதாகும்" என்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற யாழ் கல்வி வட்டார உத்தியோகத்தர் தெரிவின் போது தலைவராக திரு. எஸ். மகேஸ்வரஐயர் (யாழ் வட்டாரக்கல்வி அதிகாரி), செயலாளராக திரு கே கந்தசாமி ஆசிரியர் யாழ் மத்தியகல்லூரி), உபசெயலாளராக திரு. எஸ். இராஜதுரை (ஆசிரியர் யாழ் வைத்தீஸ்வரவித்தியாலயம், பொருளாளராக திரு எஸ் மகேசன் (அதிபர் யாழ் சன்மார்க்க வித்தியாலயம்) மேலும் 29 பாடசாலைகளிலிருந்தும் ஒரு பிரதிநிதி வீதம் நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்

யாழ் கல்வி வட்டாரத்தின் மாவட்டப் பிரதிநிதிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர் திரு கே கந்தசாமி (செயலாளர், பிரதிநிதி யாழ் மத்திய கல்லூரி), திரு. எஸ் வைத்திலிங்கம் (அதிபர் யாழ் வண். நாவலர் மவித்தியாலயம்), சகோதரி அன்ரனி யோசேவ் (அதிபர் யாழ் திருக்குடும்ப கன்னியர் ஆ.மடம்) திரு எஸ் எம் அப்துல்கபூர் பிரதிநிதி ஒஸ்மானியாக் கல்லூரி திரு கே இராஜசிங்கம் பிரதிநிதி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

ஏழாலை வடக்கில் நாளை

## கரபந்தாட்ட இறுதியும் பரிசளிப்பு விழாவும்

(தெல்லிப்பழை)

ஏழாலை வடக்கு கலாநிதி சனசமூகநிலைய கலாநிதி விளையாட்டுக்கழகத்தினரால் மின்னொளியில் நடாத்தப்பட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்புவிழாவும் நாளை சனி மாலை நிலைய விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கின்றன.

மே மாதம் நடைபெற்ற இச் சுற்றுப்போட்டியின் இறுதிஆட்டத்திலன்று ஏற்பட்ட சில அசம்பாவித சம்பவங்களால் [illegible] பரிசளிப்பும் நடைபெறுமல் நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டிருந்தது.

இறுதி 'செற்அப்' ஆட்டத்திற்கென தெரிவுசெய்யப்பட்ட அச்சுவேலி விளையாட்டுக்கழகமும், மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகமும் நாளை மோதவிருக்கின்றன.

பண்டிதர் இராசையா தலைமையில் நடைபெறும் பரிசளிப்புவிழாவுக்கு பிரதம விருந்தினராக மானிப்பாய் எம் பி திரு வி தர்மலிங்கமும் சுன்னாகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு சுகுனேந்திரனும் கலந்துகொள்வார்கள்.



## ஆசிரியர் சேவையிலிருந்து இளைப்பாறுகிறார்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் உதவி ஆசிரியராகவும், உந்துகொட அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயத்திலும் அதிபராகவும் பணிபுரிந்தவரும், மேற்படி வித்தியாலயங்களின் வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாகவிருந்து தொண்டாற்றியவருமான நீர்வேலி கந்தப்பு இராசதுரை தமது முப்பத்துமூன்று வருட சேவையின் பின் இளைப்பாறுகிறார்.

உளநூல் கலாநிதி திரு கு சிவப்பிரகாசம் காலஞ்சென்ற வித்துவான் கார்த்திகேசன், பண்டிதர் இளமுருகனார், நவநீத கிருஷ்ணபாரதி, நீர்வேலிப் பண்டிதர் செ. துரைசிங்கம் ஆகியோரிடம் முறையாக இலக்கணம்கற்ற பண்டிதரான இவர். உயர் வகுப்புகளில் இந்துசமயம், இலக்கியம், இலக்கணம் ஆகிய பாடங்களைப் போதித்து சிறந்த பண்புமிக்க திறமையான மாணவ பரம்பரையினரை உருவாக்கியவராவர். ஆசிரியப் பணியைப் புனிதமாகவும், தூய்மையாகவும் செய்த இவர் கிராம அபிவிருத்தி வேலைகளிலும் சமய வளர்ச்சியிலும் பங்குகொண்டு உழைத்தார்.

நீர்வேலிக்கிராமசபை உறுப்பினராகவும், இணக்கசபை உறுப்பினராகவும் மக்கள்குழு உறுப்பினராகவும் இருந்து தொண்டாற்றியுள்ளார்.

பாலர்களின் முன்னேற்றத்திலும், வளர்ச்சியிலும் அக்கறையுள்ள இவர் நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராகவிருப்பதோடு மேற்படி கழகத்தின் ஆதரவில் கிராமத்திற்கே பெருமையையும் புகழையும் தந்துகொண்டிருக்கும் உலோசப்பிரயாணிகளை தன்னிடம் அழைக்கும் பாலர் பகல் விடுதியை ஆரம்பித்தபோது முன்னின்றுழைத்த ஒருவராவர். நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணிய நாணய சங்கத்தின் இன்றைய கர்த்தாக்களில் ஒருவராகவும் மேற்படி சங்கத்தின் தனாதிகாரியாக பணிபுரிந்துவந்த இவர் இப்போ தலைவராகப் பணிபுரிகின்றார் நாட்டில் நாணய சங்கங்களில் மருவி வரும் இக்காலத்திலும் தரமான தொழிற்பாட்டுக்கும் இவரது திறமையான நிர்வாகமே காரணமெனலாம், இவர் நீர்வேலிக்கந்தசுவாமி கோவில் பரிபாலன சபையின் தனாதிகாரியாகவும் நிர்வாக மனேசராகவும் தொண்டாற்றிவருகிறார்.

த. பரராசசிங்கம்

# 'வாழ்நாள் முழுதும் மகிழ்ச்சி தொழிற்கல்வி அளிக்கிறது

## வட்டு. தொழிற்கல்வி நிலைய பரிசளிப்பு விழாவில் முன்னாள் கல்லூரி அதிபர்

(யாழ்ப்பாணம்)

"தொழிற் கல்வியை கற்பதன்மூலம் ஒருமனிதன் தன் வாழ்நாள் முழுவதும் சந்தோஷமாகவும், மன நிம்மதியுடனும் வாழ முடியும். கல்விக்கும் காலம், நேரம், வயது என்ற எல்லைகள் கிடையாது."

இவ்வாறு யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப ஸ்தாபனத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மனோஜஞனக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு ஐ. பி. துரைரத்தினம் தமது உரையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தமது உரையில்:

"பாடசாலைகளில் வழக்கமாக காணப்படும் கல்வி அமைப்பிலும் வேறுபட்ட கல்வித் தேர்ச்சியைத் தேடிப் பெறுவதற்காக நீங்கள் இக் கழகத்திற்கு வந்திருக்கிறீர்கள், அங்கு பெரும்பாலும் ஏட்டுக் கல்வி போதிக்கப்படுகிறது இங்கு செய்முறைக் கல்விக்காக நீங்கள் வந்திருக்கிறீர்கள். விரிந்து அகன்ற உளப்பண்பினை வழங்கும் கல்வி இப்பொழுதும் சாதாரணக் கல்விக் கூடங்களில் போதிக்கப்படுகிறது.

தொழில் சம்பந்தமாக கல்வி இங்கு போதிக்கப்படுகிறது. இற்றைக்கு முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு இளைஞர்களுக்கு அளிக்கப்பட்ட ஏட்டுக்கல்வி அவர்களது அபிலாஷைகளையும் தேவைகளையும் பூர்த்திசெய்யப் போதுமானதாக இருந்தது. ஆனால் இப்போதோ அக்கல்வி சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இல்லை. சாஸ்திரிய ஏட்டுக்கல்வி இளைஞர்களை உள உழைப்பு வேலைகளுக்கு மட்டுமே இட்டுச் சென்றிருக்கிறது, ஆனால் அத்தகைய உள உழைப்பு உத்தியோகங்கள் இக்காலத்தில் அருகிவிட்டன. இன்று கைகளால் உழைக்கக் கூடியவர்களும் உடல் உழைப்பில் நாட்டம் உடையவர்களும் தேவையான வேலை வாய்ப்புகள் இக்காலத்தில் பெருகியிருக்கின்றன.

அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னர் மனித சமூகத்தில் ஆளும் சுதந்திர வர்க்கம் அடிமைவர்க்கமென இருபாகுபாடுகள் நிலவியிருந்தன. பல்கலைக் கழகங்களிலே அன்று சுதந்திர வர்க்கத்தைச் சார்ந்த மக்களுக்கென அவர்களின் உளப்பண்புகளை வளர்க்கும் கல்வி போதிக்கப்பட்டது. காவிய சாஸ்திர விநோதங்கள் ஆகியவற்றில் ஒருவன் ஈடுபட இத்தகைய அறிவியற்றுறைக் கல்வி மனிதனை ஊக்குவித்து கல்வியினூற்றான் ஊதியம் பெறவேண்டுமென்ற நியதி, அக்காலத்தில் இல்லை. ஏனெனில் உடலாலாய தொழில்களைச் செய்யச் சமூகத்தில் கற்றோர் அன்றி மற்றோர் என்ற வர்க்கத்தினரும் இருந்தனர். முன்னர் வாழ்க்கையை வளம் படுத்தமட்டுமே கல்வி உதவியது, ஆனால் இன்றோ வாழ்க்கையை வளம்படுத்தமட்டுமன்றி வாழ்க்கைக்கு இன்றியமையாத ஊதியத்தை வழங்கும் சாதனமாகவும் கல்வி அமைகிறது.

### பணம்மட்டும் சந்தோஷம் தராது

இங்கு பெறப்படும் கல்வி மூலம் ஒரு தொழிலைச் செய்து வாழ்க்கைக்குரிய ஊதியத்தைப் பெற்று வாழ்வதற்காக உங்களில் அநேகர் இங்கு வந்திருக்கிறீர்கள் உங்களில் இங்கு கைகளை உபயோகித்துச் செய்யும் வேலைகளில் இயற்கை ஆற்றலும், அவற்றில் மனக்களிப்புடன் ஈடுபடக்கூடிய ஆர்வமும் இருக்கக்கூடும். இந்தப் பிந்திய பிரிவைச் சார்ந்த மாணவர்கள்தாம் உண்மையில் உலகில் இன்பகரமாக வாழப்போகின்றார்கள், மின்னணு இயல், உலோகம் ஒட்டுதல் அல்லது கார் இயந்திரவியல் போன்ற துறைகளில் தகுதித் தேர்வில் தேறிய நீங்கள் பணவருவாயைப் பெரிதும் தரக்கூடிய வேலைகளை மத்திய கிழக்கில் பெற்று ஏராளமான பெற்றோ-டொலர்களை நீங்கள் சம்பாதிக்கக் கூடும். ஆனால் பணமே அனைத்தையும் தரக்கூடியதன்று என்ற உண்மையையும் பணத்திற்கு அப்பாற்பட்ட ஏதோ ஒன்று வாழ்க்கைக்குத் தேவை என்பதையும் நீங்கள் விரைவில் உணர்வீர்கள், பணத்தால் மட்டும் ஒருவனுக்கு மனத்திருப்தி கிடைப்பதில்லை. துன்பகரமான வாழ்க்கை நடாத்தி வேதனை பட்டுக்கொண்டிருக்கும் அநேகரை நாம் உலகில் காண்கின்றோம். தாங்கொணா வறுமையும் அதனால் வரும் இடர்பாடுகளும் வேதனைகளும் பலருடைய வாழ்வு துன்பமயமாக இருக்கக் காரணமல்ல ஒருவருடைய இயற்கை ஆர்வத்திற்கு ஏற்ற ஒரு தொழிலில் ஈடுபடமுடியாமையே பெரும்பாலோரின் அவல நிலைக்குக் காரணமாக அமைகிறது. அத்தகையோர் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் மட்டுமே தம் தொழில்களில் ஈடுபடுகின்றனர். நாளாந்தம் தாம் செய்யும் தொழில் முடிந்த பின்னரே அநேகருக்கு வாழ்க்கை ஆரம்பமாகிறது. தூக்குமரத்தண்டை இட்டுச் செல்லப்படுவதுபோலத் தொழிற்சாலைக்கோ அல்லது வேலையகங்களுக்கோ மன வேதனையுடன் செல்கின்றார்கள். சாயங்காலம் வேலைவிட்டுத்திரும்பி வரும்போதுதான் தாம் சுதந்திரபுருடர்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு எழுகிறது. ஏனெனில் அவர்கள் வேலை முடிந்தபின்னர்தான் தமது உண்மை வாழ்க்கையினைத் தொடங்குகின்றார்கள். எனவே அனேகர் தம் இயற்கை பார்வத்திற்குப் பொருத்தமற்ற தொழில்களையே மேற்கொண்டு வாழ்கின்றார்கள். ஆகவே மனிதர்கள் தமது இயற்கை ஊக்கத்திற்கேற்ற தொழில்களை மேற்கொள்ளும் வாய்ப்பும் பரந்துவக்கூடிய சமூக அமைப்பினைக் கட்டியெழுப்ப நாம் முயலவேண்டும். ஆனால் இன்றைய பொருளாதார சமூக சூழ்நிலையில் இது பகற்கனவாகும். எனவே ஒருவர் பொருத்தமற்ற வேலையினை மேற்கொள்வதால் எழும் இந்த அவலமான விரக்தி நிலைக்குத் தீர்வு என்ன என்பதைச் சிந்திக்கவேண்டும் நாள் தோறும் வாழ்க்கைமுழுவதும் தாம் செய்யும் தொழிலின்

### ஆத்ம திருப்தி எது?

திருப்தி காணாது தவிக்கும் நண்பர்களுக்கெனத் திட்டவட்டமான புத்திமதியொன்றினைக் கூறவிரும்புகின்றேன். சுவையற்றதும் சோர்வினைத் தரக்கூடியதுமான ஒரேயொரு வேலையில் ஈடுபடுவதைக் குறிக்கோளாகக்கொள்ளாது, பல்வேறு, ஆர்வவிருப்பு மையங்களைக்கொண்ட மனிதர்களாக உங்களை நீங்கள் மாற்றிக் கொள்ளவேண்டும். வாழ்க்கையில் ஊதியத்தைப் பெறுவதற்கென ஒருவர் ஒரு தொழிலை மேற்கொண்டாலும், தனது வேலைநேரத்திற்குப்புறம்பாகத் தனது இயற்கை ஊக்கத்திற்குப் பொருத்தமான ஒரு தொழிலை ஒருவர் மேற்கொள்ளுதல் சிறப்பு. அத்தகைய முயற்சியினை எவருமே தடை செய்யவும் முடியாது. இந்த அழகிய புதிர் நிறைந்த உலகத்திலே பல்வகையான தொழில்களுக்கு இடமுண்டு. என்னைப் பொறுத்தமட்டில் வீட்டுத் தோட்டம் அமைத்தலை யான் விதந்துரைப்பேன். எல்லோர்க்கும் அன்னையான பூமியுடன் நாம் பழக வாய்ப்பு ஏற்படுகிறது இயற்கையில் பொதிந்து கிடக்கின்ற ஆழ்ந்த உண்மைகள் உங்களுக்குப் புலப்படும். கைமாறு எதிர்பாராத அதனது வள்ளற் தன்மையை நீங்கள் உணர்வீர்கள். இயற்கையோடு ஒன்றி வாழ எத்தனிப்பீர்கள்.

குறிப்பிட்ட ஒரு காரியத்தைச் செய்தலே இன்பத்தைத் தருமெனக் கண்ட பிறகு, அக்காரியத்தினை ஒருவன் தொழிலாகவும் மேற்கொள்வதற்குத் தருணம் கிடைக்கின்ற பொழுதுதான் அவனுக்கு ஆத்ம திருப்தியும் மகத்தான ஒன்றைச் சாதித்துவிட்டேனென்ற பெருமிதமும் மனக்களிப்பும் உண்டாகின்றன. அப்பொழுதுதான் வாழ்க்கை செழுமை பெற்றுப்பூரணத்துவம் அடைகின்றது.

ஏதோ ஒரு துறையில்பயிற்சி பெறும் உங்களுக்கு மேலும் புத்திமதி கூறுகிறேன். வெறுமனே "டிப்ளோமா" என்ற பட்டத்தினை நீங்கள் பெறுவதுடன் உங்கள் கல்வி பூர்த்தியாகி விட்டது என்று நீங்கள் நினைக்கக்கூடாது விஞ்ஞானத்துறையும்தொழில் நுணுக்கவியற்றுறையும் விரைவாக உலகில் முன்னேறிக் கொண்டு வரும் துறைகளாகும். அதனால் ஒவ்வொரு துறையில் நிலவும் திறனையும் அறிவையும் ஒருவர் தொடர்ந்து மேன்மேலும் விருத்தி செய்யவேண்டும். சில திறன்கள் காலகதியில் உபயோகத்திற்கு ஒவ்வாதனவாக வழக்கற்றுப்போக, வேறு புதிய திறன்கள் காலகதியில் உபயோகத்திற்கு ஒவ்வாதனவாக வழக்கற்றும்போக, வேறு புதிய திறன்கள் தோன்றுகின்றன. இத்தகைய மாற்றங்களை உற்றுணர்ந்து அதற்கேற்றபடி உங்கள் திறன்களை வளர்க்காவிடின் உங்கள் படிப்பும் கல்வியும் பயிற்சி பெற்றும் பயனற்றனவாகிவிடும். எப்பொழுதுமே அறிவுத்திறன்களின் ஒரு தொகுதி அழிந்துகொண்டு போக உபயோகமுள்ள புதிய அறிவுத்திறன்கள் உருவாகுகின்றன. உதாரணமாககடந்த 25ஆண்டுகாலமாகவானொலிப் பெட்டியினைத் திருத்தும் பணியில் ஈடுபட்ட ஒருவனுக்கு இற்றைக்கு 10 ஆண்டுகளுக்குமுன் ரூன்ஸிஸ்ரர் றேடியோவைத் திருத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இன்னும் ஓரிரு ஆண்டுகளில் தொலைக்காட்சி சாதனங்களைப் பழுதுபார்க்கும் திறனை அவன் கற்கவேண்டிநேரிடும். இன்றேல் அவன் வாழ்க்கையில் தக்க ஊதியத்தை இழந்துவிடுவான். அங்ஙனம் கைக்கடிகாரத்தைப் பழுதுபார்க்கும் ஒருவன் இப்போது மின்னணு- (எலெக்ரோனிக்) இயற்கைக் கடிகாரத்தைப் பற்றி அறியவேண்டியிருக்கிறது. எனவே தொழில்மூலம் சம்பாதியம் பெறவிரும்பினால் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து புதிய திறன்களை நீங்கள் கற்கவேண்டும்

### தபால் மூலக்கல்வி...

எனினும் இத்தகைய கல்வியினைத் தொடர்ந்து கற்பதற்கு நீங்கள் மீண்டும் பாடசாலைக்குப் போகமுடியாது. சுருங்கச் சொன்னால் நேரடியாக ஓர் ஆசிரியரிடமிருந்து பாரம்பரிய முறைமூலம் நீங்கள் கல்வி கற்கமுடியாது. எனவே புதிய திறன்களைக்கற்று, அவற்றை விருத்திசெய்ய, வேறொரு முறையினை நீங்கள் கையாளலாம் இம்முறையில் ஆசிரியரும் மாணவரும் நேருக்குநேர் சந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. இம்முறைமூலம் கல்வி பெறுவதற்கு குறித்தகாலமோ குறித்த இடமோ தேவையில்லை இங்கிலாந்திலிதனை திறந்த பல்கலைக்கழகக் கல்வி என்றும் அமெரிக்காவில் சுவரில்லாப் பல்கலைக் கழகம் என்றும் சொல்வர். தபால் மூலம் கல்வி என்றது உங்களுக்குத் தெரியும். தபால் மூலமோ அல்லது மின்நாடா (ரேப்ரெக்கோடர்) வானொலி தொலைக்காட்சி மூலமோ உங்கள் கல்வித் தகைமையை விருத்தி செய்து கொள்ளலாம். தொழில் முறைக் கல்வியைப் பயின்ற நீங்கள் நல்ல ஊதியத்தைப் பெறவிரும்பினால் சாஸ்திரக் கல்வியைப் பயின்று வேலையில் அமர்ந்தவர்களிலும் பார்க்க புதிய திறன்களை வளர்க்கவும் நீங்கள் முயலவேண்டும் இம் முயற்சிக்குத் திறந்த பல்கலைக் கழக முறையினை நீங்கள் உபயோகிக்கலாம். (கா)

## மக்கள் கருத்து

### மிருசுவிலை இ. போ. சபை அங்கீகரிக்காதது ஏன்?

மிருசுவில் கிராமசபையின் எல்லைக்குள் மிருசுவில் தெற்கு, மிருசுவில் வடக்கு, மன்னன் குறிச்சி, குருக்கள் மரவடி, உசன், கரம்பகம், கெற்பெலி விடத்தற்பளை, ஓவாளி, தவசிகுளம், ஒட்டுவெளி, எழுதுமட்டுவாழ், மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பிரிவு போன்ற ஏராளமான குறிச்சிகள் உள்ளன. மிருசுவிலில் கிராமசபை அலுவலகம், தபாற்கந்தோர், புகையிரத நிலையம் சங்கக்கடை கல்லூரிகள், இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ, கத்தோலிக்க தேவாலயங்கள், கன்னியாஸ்திரிகள் மடம் போன்ற யாவும் அமைந்துள்ளன, அப்படியிருந்தும் இ. போ. ச. பஸ்களில் கொடுக்கப்படும் பிரயாணச் சீட்டுகளில் மட்டும் மிருசுவில் என்று எழுதப்படுவதில்லை. மிருசுவில் என்று பிரயாணிகள் பிரயாணச் சீட்டு கேட்டால் எழுதுமட்டுவாழ் என்றுதான் சீட்டில் எழுதப்படுகின்றது. இலங்கை புகையிரதப் பகுதியினருக்கு தெரிந்துதான் மிருசுவிலிலே புகையிரத நிலையத்தை அமைத்து மிருசுவில் என்ற பெயருடன் பிரயாணிகளுக்கு வழங்கி வருகின்றார்கள் இலங்கை புகையிரதப் பகுதியினருக்குத் தெரிந்த மிருசுவில் கிராமம் இ. போ. சபையினருக்கு இன்னுமேன் தெரியாமலிருக்கின்றதோ புரியவில்லை. இ. போ. சபை பஸ்களில் மிருசுவில் என்று எழுதப்படாததால் மிருசுவில் பிரயாணச் சீட்டைப்பெறும் பிரயாணிகளுக்கும் எழுதுமட்டுவாழ் செல்வதற்கான பிரயாணக் கட்டணமே அறவிடுகின்றார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமத்திற்கு பிரயாணக் கட்டணமே அறவிடுகின்றார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமத்திற்குப் பிரயாணக் கட்டணம் 90 சதமாகவிருக்கும் போது மிருசுவிலுக்கு ஒரு ரூபாவாக விருந்தால் எவ்வளவு நல்லது. எழுதுமட்டுவாழ் செல்வதற்கான பிரயாணக் கட்டணமே மிருசுவிலுக்கும் அறவிடுகின்றார்கள், இப்படியான அநீதி ஏன்?

தயவுசெய்து மிருசுவில் என்று பிரயாணச் சீட்டுகளில் எழுதி எமக்கு பயன் அளிப்பார்களா?

யோ. வின்சன்ட் ஜெயிஸ்

மிருசுவில்

## இலங்கை - அமெரிக்க 200 வருட வர்த்தக உறவு

### அமெரிக்கதூதுவர்பெருமிதம்

(கொழும்பு)

"பதின்மூன்று அமெரிக்க காலனிகள் ஒன்றிணைந்த காங்கிரஸ் 1776-ம் ஆண்டு சுதந்திரப் பிரகடனம் செய்த அந்தத் தினம் முதல்கொண்டு இன்று வரையில் உலகில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நாம் சந்திரனுக்குச் சென்றுள்ளோம்; நாம் வியாழன் கிரகத்தை நெருங்கிப் புகைப்படங்களைப் பிடித்துள்ளோம். பூமியிலோ பழைய பிரச்சினைகள்- சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகள்- தொடர்கின்றன. இந்தப் பிரச்சினைகளைக் கையாளுவதில் நாடுகளிடையே ஒத்துழைப்பு இருக்க வேண்டியது எவ்வளவு முக்கியமான ஒன்று என்பதை நாமனைவரும் உணர்ந்துள்ளோம். அந்த வகையான ஒத்துழைப்பு நமது இரு நாடுகளிடையேயும் 1789-ம்ஆண்டு முதற்கொண்டு வளர்ச்சி கண்டு வந்துள்ளது. இதே வருடத்தில் தான் அமெரிக்க வர்த்தகக் கப்பல்கள் முதல் முறையாக இலங்கைக்கு விஜயம் செய்தன." என்று அமெரிக்காவின் 203 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு அமெரிக்கத் தூதுவர் டபிள்யூ ஹவார்ட் ரிக்கின்ஸ் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார் அவர் மேலும் தெரிவிப்பதாவது:

"இலங்கையும் அமெரிக்காவும் இருநூறு வருட காலமாக நிலையான பரஸ்பரம் பயன் தரும் வர்த்தக உறவைக் கொண்டுள்ளன. இந்த நவீன யுகத்தில், கடல் சார்ந்த உயிரியல் முதல், காலநிலை ஆராய்ச்சி வரையிலான பல துறைகளில் எமது அறிஞர்களும் விஞ்ஞானிகளும் ஒன்றிணைந்து பல்கலைக்கழக மற்றும் சர்வதேசத் திட்டங்களில் பங்கு பற்றியுள்ளனர். நமது இரு நாடுகளுக்கும் இடையிலான போக்குவரத்துக்கள் என்றென்றும் அதிகரித்து வருகின்றன அத்தோடு ஒருவருடைய பண்பாட்டை மற்றவர் புரிந்து கொள்ளச் செய்யும் பரஸ்பர நல்லுணர்வையும் அவை எப்போதும் வளர்ச்சியடையச் செய்கின்றன."

## தொழிற்சங்கம் அமைக்க ஏற்பாடு

(உடுப்பிட்டி)

வதிரி பாதணி உற்பத்தித் தொழிலாளர்கள் தமக்கெனத் தனியான தொழிற் சங்கமொன்றை உருவாக்கவுள்ளனர் பாதணி உற்பத்தித் தொழிற்பிரமுகரும், தொழிற் சங்கவாதியுமான திரு. வே. மு கந்தவனம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

## நிக்கராகுவாவில்
# அரசபடைகள் வசம் முக்கிய பட்டினங்கள்!
## தெற்கில் கிளர்ச்சிப் படைகள் முன்னேற்றம்

### ஜனாதிபதி ராஜினாமா?

மனகுவா, ஜூலை 5 நிக்கராகுவாவின் வட பகுதியிலுள்ள நகரங்களை இடதுசாரி சாந்தினிஸ்ட் கொரில்லாக்களிடம் இருந்து மீண்டும் கைப்பற்றுவதற்கான தாக்குதல் ஒன்றை மேற்கொண்ட அரச விசுவாசப் படையினர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நகரான ஸெபாக்கோவை கடுமையாகத் தாக்கியதுடன் 22 பட்டினங்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளன.

இதற்கிடையில் நிக்கராகுவாவின் ஜனாதிபதி அனஸ்தாஸியோ ஸோமோஸா தமது பதவியை ராஜினாமாச் செய்யவுள்ளார் என்ற வதந்தி கடந்த இரண்டு தினங்களாகப் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி ஸோமோஸாவைக் கவிழ்க்க முழுமூச்சான யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் கிளர்ச்சிப் படையினர், நிக்கராகுவாவிற்கு 60 மைல் தெற்கேயுள்ள றிவால் நகரத்தைக் கைப்பற்றியுள்ளதாகவும், தென்பகுதியில் கிளர்ச்சிக்காரர்கள் முன்னேறியிருப்பதாகவும் அறியப்படுகிறது. வடக்கே 50 மைல் தூரத்தில் உள்ள நிக்கராகுவாவின் இரண்டாவது நகரமான லியோனிலும், 25 மைல் தூரத்தில் உள்ள மஸாயாவிலும் வெடிகுண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இது இவ்விதமிருக்க நிக்கராகுவாவில் இருந்து வெளியேறிய அகதிகள் கொஸ்டா றிக்காவிலும் கொண்டுராஸிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். கொஸ்டாரிக்காவில் 25,000 அகதிகளும் கொண்டுராஸில் பல ஆயிரக்கணக்கான அகதிகளும் தஞ்சம் புகுந்துள்ளதால் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை மேற்கொள்ள ஐ.நா சபை முன்வந்துள்ளது. [கா]

### பத்திரிகை நிறுவனத்துக்கு நஷ்டஈடு

(கொழும்பு)

அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்துக்கு ஒருகோடியே 80 லட்சம் ரூபாய்க்கு அதிகரிக்கப்படாத அளவில் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று நேற்று பாராளுமன்றம் முடிவுசெய்துள்ளது.

### தேர் வெள்ளோட்டம்

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் மேற்கு வேம்படி முருகன் ஆலயத்தின் புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது. தேர்த் திருவிழா 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை நடைபெறும். [கொ-அ]

# அல்ஜீரியாவின் முன்னாள் ஜனாதிபதி பென்பெல்லா விடுதலை

அல்ஜியஸ், ஜூலை 5 அல்ஜீரியாவின் முன்னாள் ஜனாதிபதி திரு. அகமட் பென்பெல்லா பதினைந்தாண்டுகள் சிறையிலிருந்து நேற்று விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.

1965ம் ஆண்டு ஜனாதிபதி பூமதியினால் மேற்கொள்ளப்பட்ட புரட்சியை அடுத்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த திரு பென்பெல்லா தமது 60வது வயதில் இப்பொழுது விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் காலமான ஜனாதிபதி பூமதியான் திரு பென்பெல்லாவிற்கு ஒரு தடவை தூக்குத் தண்டனையை விதித்து தீர்ப்பளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (கா)

# மாணவி கடத்தல்
## சந்தேகநபர்கள் பிணையில் அனுமதி

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறையில் ஒரு மாணவியை பலவந்தமாகக் காரொன்றில் கடத்திச்சென்றது தொடர்பாக மல்லாகம் நீதிபதியால் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த 4 சந்தேக நபர்களும் தலா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

காங்கேசன்துறை நடேஸ்வரக்கல்லூரியில்பயிலும் 14 வயது மாணவி கல்லூரிக்கு சென்று கொண்டிருக்கையில், இனந்தெரியாதவர்களால் காரொன்றில் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் ஒரு வெட்டியில் வைத்து மீட்கப்பட்டிருந்தார். இச்சம்பவம் தொடர்பாக விசாரணையிலீடுபட்ட காங்கேசன்துறைப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட சின்னத்துரை செல்வராசாவும், மல்லாகம் நீதிமன்றத்தில் சரண்புகுந்த சின்னத்துரை துரைராசா, கந்தன் செல்வராசா, கந்தையா குணராசா (கார்ச்சாரதி) ஆகியோரும் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீண்டும்மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேகநபர்களைப் பிணையில் விடுமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு ஆர் ஜே செல்வரத்தினம் கோரினார். இதையடுத்து அவர்களை தலா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த மல்லாகம் நீதிபதி திரு எஸ் ஆனந்தகுமாரசாமி, மீண்டும் ஆகஸ்ட் 13ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.


# வைத்திலிங்கம்ஸ்

0 உறுதியானதும்
0 நீடித்து உழைப்பதும்
0 தன்னிகரற்றதுமான

'றிவர்' பிரான்ட்

கல்வனைஸ்ட் இரும்புத் தகடுகள்

பிரதான விநியோகஸ்தர்களும் இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

450, பழைய சோனக தெரு,
கொழும்பு--12
தொலைபேசி: 33143-4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


### மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை, அல்லாரை தெற்கு அருகம்புலம் மகாகணபதிப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் 16ம் திகதி சனியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவக்கிரியைகளை சித்தாந்த நல்லறிஞர் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் நடாத்திவருகின்றார். (க)

### ராஜினாமா ஏற்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி நகரசபைக்கு ஐக்கியதேசியக்கட்சி சார்பில் தெரிவுசெய்யப்பட்ட மூதலாவது உறுப்பினர் திரு தா தர்மேந்திரனின் ராஜினாமாவை யாழ்ப்பாணம் தேர்தல் உதவி ஆணையாளர் சட்டபூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

புதிய உள்ளூராட்சி சட்ட மூலம் 65-3ம் பிரிவிற்கமைய திரு தர்மேந்திரனின் ராஜினாமாவை உதவி ஆணையாளர் ஏற்றுக்கொண்டு மூன்றாவதாக ஐக்கியதேசியக்கட்சி வேட்பாளரது பட்டியலில் இடம் பெற்ற திரு வ செல்வரட்ணம் சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அறிவித்தல் நேற்று பொதுஅறிவித்தலாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. திரு தர்மேந்திரன் சென்றமாதம் தனது ராஜினாமாவை உதவித் தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பித்திருந்தும் அவரது ராஜினாமா ஒழுங்கற்றமுறையில் தயாரிக்கப்பட்டிருந்தமையால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பின்னர் உள்ளூராட்சிமன்ற சட்டத் திருத்தமவாக அனுப்பப்பட்டமையால் ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டு பட்டியலில் மூன்றாவதாக இடம்பெற்ற திரு செல்வரத்தினம் நகரசபை உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என தேர்தல் உதவி ஆணையாளர் திரு ஏ ஜெயரட்ணம் எமது நிருபரிடம் தெரிவித்தார். [செ]

## மக்கள் நன்மைக்காகவே நீதித்துறை மாற்றங்கள்
### மல்லாகம் நீதிபதி கருத்து

(மாவிட்டபுரம்)

"நமது நாட்டில் அடிக்கடி நீதிபரிபாலனத்துறையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவற்றைக் கண்டு மக்கள் திகைக்கக்கூடாது. இம்மாற்றங்கள் பொதுமக்களது நன்மை கருதியே கொண்டுவரப்படுகின்றன"

இவ்வாறு, மல்லாகம் புதிய முதனிலை நீதிமன்ற திறப்பு விழா வைபவத்தில் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி பேசுகையில் கூறினார்.

மங்களவாத்தியங்கள் முழங்க மங்கள விளக்கேற்றி நாடாவை வெட்டி புதிய நீதிமன்றத்தைத் திறந்து வைத்த நீதிபதி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இன்று ஏற்பட்டுள்ள மாற்றத்தினால் மல்லாகத்தில் இரு நீதிமன்றங்கள் செயல்பட உள்ளன. இதன்மூலம் பொது மக்கள் தமது வழக்குகளை இலகுவாக நடத்த வழிபிறந்துள்ளது. ஆரம்பத்தில் பொதுமக்களுக்கு இது சிரமங்கள் ஏற்பட்டாலும் காலப்போக்கில் இவை மறைந்துவிடும் என்றார்.

மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் பேசுகையில் கூறியதாவது.

"நீதிபதிகள் சட்டங்களை மட்டும் கருத்தில் கொள்ளாது மனித சுதந்திரம் நீதிபதிகளுக்கான அதிகாரம், மக்களது கஷ்ட நஷ்டங்கள் போன்ற பல்வேறு அம்சங்களை கருத்தில் கொள்ளவேண்டும். இலைசமயங்களில் சட்டத்தின் பாதையில் செல்லும்போது நீதிதவறிவிடக்கூடாது. சட்டங்கள் எதுவானாலும் நீதியின் அடிப்படையில் எதையும் துணிந்து தீர்மானிக்கும் நிலையில் நீதிபதிகள் விளங்க வேண்டும் மல்லாகம் மாவட்ட நீதிபதி இந்தவகையில் சகல அம்சங்களும் பொருந்தியிருக்கிறார். அவர் போன்ற இந்த முதனிலை நீதிமன்ற நீதிபதியின் கடமையும் அமைய வேண்டுமென்றே நாம் விரும்புகின்றோம்" என்றார்.

## "மாணவர் மத்தியில் ஒழுக்கம் முக்கியமானது"
### — தி. மாணிக்கவாசகர்

[யாழ்ப்பாணம்]

அறிவு வளர்ச்சிக்கு கல்வியும் உடல் வளர்ச்சிக்கு விளையாட்டுப் போட்டிகளும் அவசியமாகும். அறிவுவளர்ச்சியுடன் உடல் உறுதியடையும் போதுதான் ஒருவன் முழுமனிதனாகிறான். அதனால்தான் பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதோடு விளையாட்டுப் போட்டிகளும் நடாத்தப்படுகிறது.

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றபோது பிரதமவிருந்தினராகக் கலந்து உரையாற்றிய வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு தி மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு மாணிக்கவாசகர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது!

"போட்டிகளில் வெற்றி பெறவேண்டுமென்ற ஆர்வம் இருத்தல் வேண்டுமே தவிர பொறாமை இருத்தல்கூடாது எந்த விஷயத்திலும் மாணவர்கள் ஒழுக்கத்தைக் கைக்கொள்ளவேண்டும். இங்கு இப்போது இந்தப்போட்டிகளில் பங்கு பற்றிய மாணவர்கள் மிக ஒழுக்கமானமுறையில் பங்கு பற்றியதைநான்பாராட்டாமல் இருக்கமுடியாது

"விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வம் காட்டுவதுபோல் கல்வியிலும் மாணவர்கள் ஆர்வம்காட்டுதல் வேண்டும். கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு மாணவர்கள் இதனைமனதிற்கொள்ள வேண்டும்.

திருமதி ஞானம்பிள்ளை மாணிக்கவாசகர் பரிசில்களை வழங்கினார். [கொ-அ]

### வீட்டை உடைத்து திருட்டு

[வவுனியா]

வவுனியா வைரவப்பிள்ளையார் குளம் வீதியிலுள்ள வீடொன்றை உடைத்த இனந்தெரியாத நபர்கள் அங்கிருந்து 19 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் ரொக்கப்

[5-ம் பக்கம் பார்க்க]

## வீட்டை உடைத்து.........

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

பணத்தையும் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர் என்று பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம்காலை 8-30 மணிக்கும் பகல் 1 மணிக்கும் இடையில் வீட்டின் பின்புறக் கதவையுடைத்தே இத்திருட்டு இடம்பெற்றுள்ளது. (இ)

வெஸ்லி
சாவிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
பட்டி
விக்கிரமாதித்தன்

ஜனத்திரள் நிறைந்த
3வது வாரம்
Rio Phone: 7607
(Jaffna) Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
THE ARENA
Strictly for adults.
Sex Thrill.

ராஜ்கமல் [சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி, சாவித்திரி
காத்தவராயன்

கொட்டகை நிறைந்த 4-வது வாரம்
REGAL Daily at 2-00 4-30, 7-00 & 9-30 p.m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS
in
Mountain In The Jungle
Color — Scope — Adults
சிறுவர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

3-வது வாரம்
ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
கொட்டகை நிறைந்த காட்சி.

[குறிப்பிடப்பட்ட சில தினங்கள் மட்டும்]
மனோகரா 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ்நகர்)
சிவாஜி-பத்மினி
கருணாநிதியின்
பணம்
[புதிய பிரதி]
[இதுவே யாழ்நகரில் கடைசித்தடவையாக காண்பிக்கப் படுவதால்அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்]

சில தினங்கள் மட்டும்
வின்சர் போன்: 400
[யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் தினசரி 10-30, 2-30, 6-30, & 9-45.
[யாழ்ப்பாணம்]
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஒளவையார்

லிடோ போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர்]
சிவாஜி-கே. ஆர். விஜயா
செல்வம்

83வது தினம். (கடைசி சில தினங்கள் மட்டும்)
தினசரி 4 காட்சிகள்
ராஜா
யாழ். நகர்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
புதிய பிரதி ஈஸ்மன்கலர்

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
நாகேஸ்-கல்பனா நடித்த
சாது மிரண்டால்
[புத்தம் புதிய பிரதி]

# இன்றைய பலன்

**ஆனிமாதம் 22-ம் திகதி**

**[வெள்ளிக்கிழமை]**

(6-7-1979)

**மேடம்:** தூரதேச வாசத் உங்களைத் தூரத்தில் ஆழ்த்தும், எதிர்பாராத விபத்துக்கும் இடம் ஏற்படலாம், ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும்.

**இடபம்:** இரக்கசிந்தை மேலிடும், மற்றவர்களுக்கு உதவுவதில் மகிழ்ச்சியடைவீர்கள், வீட்டிலுள்ளவர்களின் அன்பு தாராளமாகக் கிடைக்கும், புதுமணத் தம்பதிகளுக்கு அதிர்ஷ்டலாபங்களும் கிடைப்பதற்கு இடமுண்டு

**மிதுனம்:** கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாமல் வேதனைப்படுவீர்கள், மற்றவர்களின் ஏழனப் பார்வைக்கு இலக்காகாமல் பணத்துடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும், மௌனம் விரும்பத்தக்கது.

**கடகம்:** அன்னியர்கள் அவகாசம் புதிய தலையிடியைத் தோற்றுவிக்கும், இளைய சகோதரத்தின் உடல்நிலை பாதிக்கப்படலாம், சிந்தனை அதிகமாகும்.

**சிங்கம்:** புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும், கூட்டுவியாபாரத்தால் முன்னேற்றமுண்டு, புதுமனை கட்டுவதிலும் சிலரது கவனம் திருப்பப்படலாம், பண பலமும் உண்டு.

**கன்னி:** துள்ளிவரும் வெள்ளிப்பணம் புதிய நண்பர்களையும் கொண்டு வரும், மக்கள் பணியே மகேசன் பணியாகக் கருதுவீர்கள், அற வழிமூலம் மற்றவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள் பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாகும்.

**துலாம்:** நிதியின் முடக்கம் ஏற்படும், சிலர் வீண்பழிக்கும் இலக்காவார்கள், விஷமிகளின் தொல்லைகள் புதிய உருவை எடுக்கும், பயிர்ச் செய்கையில் பாதிப்பு ஏற்படலாம், துணிச்சலுடன் எதிர் நீச்சல் போட்டால் வெற்றியுண்டு.

**விருச்சிகம்:** குடும்பக் கவலையுடன் குறுக்குவழி தலையிடு புதிரபோடும், வாழ்க்கையில் சோர்வுக்கு இடமுண்டு.

**தனுசு:** எழுத்தாளருக்கு இன்று எழுச்சிமிக்க தினம், புதிய படைப்புகளுக்கான கருவூலம் கிடைக்கலாம், சிலர் வாழ்க்கையில் சன்மானம் கிடைப்பதற்கும் இடமுண்டு. குடும்ப வாழ்க்கையிலும் சுமுகமான சூழ்நிலை உருவாகும்.

**மகரம்:** உணர்ச்சிமயமான தினம், மனப்போராட்டங்கள் நடைபெறும், உடல் நலமும் பாதிக்கப்படலாம், குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்தி மனப்பான்மையை உருவாக்கும்.

**கும்பம்:** புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும், புதிய அனுபவங்கள் கிடைக்கும், குறிக்கோளில் வெற்றியுண்டு, ஆனந்த நிலை.

**மீனம்:** மகிழ்ச்சிகரமான தினம், குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் கலகலப்பு ஏற்படும், நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள், கணவன் மனைவி உறவு மிகவும் நெருக்கமாக இருக்கும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# "பாடசாலை வளர்ச்சிக்காகவே அபிவிருத்திச் சங்கங்கள்"

[புலோலி]

"எதிர்காலத்தில் ஒழுக்கம், கட்டுப்பாடு, கடமையுணர்ச்சி கொண்ட சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்குவதற்காகவே அரசாங்கம் புதிய திட்டத்தின்கீழ் பாடசாலைகளில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் நலன்விரும்பிகள் ஆகியோரைக்கொண்ட பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களை சகல பாடசாலைகளிலும் உருவாக்கி வருகின்றது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் மாணவர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலமே பாடசாலைகளை அபிவிருத்தியடையச் செய்யமுடியும்"

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய கல்லூரி அதிபர் செல்வி ஆர். ஜே. மான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பின்வருவோர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: செல்வி ஆர். ஜே. மான் [அதிபர்]. உபதலைவர்: சட்டத்தரணி எம். வேலும்மயிலும் [நகர சபைத் தலைவர்] செயலாளர் திரு. வி. கந்தப்பிள்ளை [ஆசிரியர்], பொருளாளர்: திருமதி ரி. அரியரத்தினம் [ஆசிரியை], கணக்குபரிசோதகர்: திரு வி. குணசீலன் [ஆசிரியர்], அத்துடன் திரு. மு. பொ. வீரவாகு [நகரசபை அங்கத்தவர்] திரு. வை. வேலும்மயிலும் [உதவி அரசாங்க அதிபர்] திரு. ரி. துரைசிங்கம், திருமதி எம். அருளையா திருமதி பீ. தர்மபாலன் திருமதி ஏ. அர்ச்சுனு திருமதி எஸ். பாலகிருஸ்ணன் செல்வி சாந்திரா பாலகிருஷ்ணன் [மாணவத் தலைவி] ஆகியோரைக்கொண்ட ஆளுகைக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. [அ]

## நாடக விழாவில் 3 நாடகங்கள்

[யாழ்ப்பாணம்]

'சிவசக்தி' கலைஅரங்கு அளிக்கும் நாடகவிழா யாழ். ட்றிமர் மண்டபத்தில் மூன்று தினங்கள் நடைபெறவிருக்கிறது.

இம்மாதம் 14ம் திகதி சனிக்கிழமைமாலை சிறுவர்ஆண்டை முன்னிட்டுத் தயாரிக்கப்பட்ட சிறுவர் நிகழ்ச்சிகளுடன் 'பக்கத்து வீட்டுப் பவளம்' என்ற நகைச்சுவை நாடகமும், 21ம் திகதி சனிக்கிழமை மாலை 'அபாய அறிவிப்பு' இசை நாடகமும், 28ம் திகதி சனியன்று மாலை 'வாசித்றி வனிதை' என்ற நகைச்சுவை நாடகமும் மேடையேற்றப்படும். [அ]

## தமிழ் நாடகவிழா

[கொழும்பு]

இலங்கை மத்திய வங்கி தமிழ் இலக்கிய மன்றம் அகில இலங்கை அடிப்படையில் தமிழ் நாடகப் போட்டி ஒன்றினை கொழும்பில் நடாத்துவதற்கு முடிவு செய்துள்ளது. இந்நாடகப் போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் இதுதொடர்பான மேலதிக விபரங்கட்கு ஜூலை மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: திரு. மு. நிரவியநாதன், இலங்கை மத்திய வங்கி தமிழ் இலக்கிய மன்றம், பொருளாதார ஆராய்ச்சி திணைக்களம், 6ஆம் மாடி, வடகோபுரம், இலங்கை மத்திய வங்கி, கொழும்பு-1

## ஆண்டுவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கட்டைப்பிராய் கலைமணி சன சமூக நிலையத்தின் 30வது ஆண்டு நிறைவுவிழா நாளை சனிக்கிழமை மாலை திரு அ. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பியுமான திரு எம். சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார் கோப்பாய் எம். பி. திரு சி. கதிரவேலுப்பிள்ளை, கோப்பாய் கிராம சபை விசேட ஆணையாளர் திரு ஜே. எஸ். எஸ். ஆனந்தம் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு ஏ. நீலகண்டன் விவசாயப் போதனாசிரியர் திரு அ. யோகலிங்கம் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

மதுரையை எரித்தது கண்ணகியின் குற்றம் என்ற தலைப்பில் நடைபெறும் வழக்குரை மன்றத்தில் அ. குமரன், இ. ஜெயராஜ் ம. சிவகுமார் ஆகியோர் வாதிகளாகவும் கீழ்கரவை பொன்னையன் அ. வரதராஜன், பொ. கணேசமூர்த்தி ஆகியோர் எதிர்தரப்பிலும் வாதிடுவர்.

'விசித்திர உலகம்', 'இதயதாகம்' 'சண்டியன் சண்முகம்' ஆகிய நாடகங்களும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும், காலை சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டிகள் நடைபெறும். [கா-கு]

## அத்தியார் இல்லப்போட்டி

[நீர்வேலி]

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இம்மாதம் 13ம் திகதி வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் க. இராசரத்தினம் தலைமையில் கைலாஸ், சிகிரியா, அஜந்தா ஆகிய இல்லங்களுக்கிடையில் நடைபெறவுள்ளது.

பிரதம கல்விப்பதிகாரி திரு. எஸ். சிவபாதம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். திருமதி சிவபாதம் பரிசில்களை வழங்குவார். (அ)

## உடுப்பிட்டியில்

[யாழ்ப்பாணம்]

உடுப்பிட்டி பெண்கள் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை நடைபெறவிருக்கிறது.

விளையாட்டுப் போட்டியை உடுப்பிட்டி எம். பி. திரு. ரி. இராசலிங்கம் ஆரம்பித்துவைப்பார். இவ்விழாவில் யாழ் கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு க. நவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்

வட்டாரக் கல்வி அதிகாரி திரு வ. க. ஈசுரபாதம் பரிசில்களை வழங்குவார் (கா)

சாந்தி யாழ். நகர் - போன் 7642
10-30, 2-30, 6-30, 9-45
"அக்பர்" புகழ் திலிப் குமார்
(இரட்டை வேடங்களில்)
ஆராதனா புகழ் சர்மிலாதாகூர்...
டாஸ்தான்
இந்தி — கலர் — இசை — லக்ஷ்மி காந்த் பியரேலால்
திகிலூட்டும் மர்மங்கள் நிறைந்த சித்திரம்
DILIPKUMAR... SHARMILATAGOOR...BINDU...
DUSTAN - HINDI—COLOUR
Music: Luxmikhant Pyrelal
SUSPENSE THRILLER

# வட்டமேசை

## மாநாட்டை கூட்டுக!

### மாநகரசபைக்கு வரும் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

சிங்கள-தமிழ் மக்கள் மத்தியில் சமாதான சகவாழ்வுக்கு வித்திடும்வகையில் நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட சகல அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கியதான ஒரு வட்டமேசை மகாநாட்டைக் கூட்டுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றை யாழ் மாநகரசபையின் இன்றைய கூட்டத்தில் கொண்டுவருவதற்கு உதவி மேயரும் தமிழர் விடுதலைக் கூட்டணி மாநகரசபை உறுப்பினருமான திரு. பி. எஸ். சேவியர் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் பல பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறவில்லையென்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்த வட்டமேசை மகாநாட்டைக் கூட்டும் நோக்கத்தைக் கைவிடக்கூடாது என்று அவர் அத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## முதல்பொது வைபவம்

(யாழ்ப்பாணம்)

இன்றுபிற்பகல் நடைபெறும் கொக்குவில் இந்துக் கல்லூரி இல்லவிளையாட்டுப் போட்டி வைபவத்தில் தொழிலதிபர் சமாதானநீதவான் திரு. எம். சின்னத்துரை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். சமாதான நீதவானாகக் கலந்து கொள்ளும் முதலாவது பொதுவைபவம் இதுவாகும். [ஈ]

## வானொலியில் இன்று

(யாழ்ப்பாணம்)

இன்றிரவு 7-35 மணிக்கு இலங்கை வானொலி தமிழ் சேவை ஒன்றில் பல்வைத்திய நிபுணர் டாக்டர் பி. எஸ். பாரதி ஒழுதிய 'சண்முக அவதாரம்' என்னும் இசைச்சித்திரம் இடம் பெறும். இதன் மறு ஒலிபரப்பு இம்மாதம் 20-ம் திகதி இரவு 7-35 மணிக்கு இடம் பெறும். [ஈ]

## இன்று கும்பாபிஷேகம்

துன்னாலை தெற்கு நுணுவில் குளக்கோட்டு விநாயகர் ஆலயத்தில் ஸ்ரீ சண்டேஸ்வரர் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுகிறது.

நண்பகல் 12 மணிக்கு புதிதாக அமைக்கப்பெற்ற ஆலயத்தில் புதிதாக உருவாக்கிய சண்டேஸ்வர சுவாமியை பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

0 0 0

ஏழாலையில்

ஏழாலை — இலந்தைக்கட்டி ஸ்ரீ பாதாள ஞானவைரவர் சுவாமி கோவில் மணிக்கோபுர கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகிறது.

நண்பகல் 12 மணிக்கு தொழிலதிபர் திரு. க. கனகராசா தம்பதிகளால் கட்டுவிக்கப்பட்ட மணிக்கோபுரத்திற்கு அபிஷேகமும், மணி பிரதிஷ்டையும் நடைபெறும்.

சிவஸ்ரீ ச. பிரணதார்த்திஹரக்குருக்கள், சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள், பிரம்மஸ்ரீ சோ. பாலகிருஷ்ண சர்மா ஆகியோர் தலைமையிலேயே இக்கிரியைகள் நடைபெறவுள்ளன. (கா)

## இந்த சைக்கிள் யாருடையது?

(யாழ்ப்பாணம்)

பலகாலமாகப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டு எவராலும் உரிமை கோரப்படாத ஐந்து சைக்கிள்களைப் பொலிஸார் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளனர்.

றலி டி. டி. 70770, றலி பி.ஜி 38815, லேடீஸ் றலி ஏ எச் 16373, ரேட்மாஸ்ரர் எச் ஓ 9300, மொனறு ஒ ஏ 5034 ஆகிய சைக்கிள்களே யாழ் நகரின் பல இடங்களிலும் கண்டெடுத்து யாழ் நீதிமன்றத்தில் பொலிஸார் ஒப்படைத்துள்ளனர்.

சைக்கிள்களைத் தவறவிட்டவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டி சைக்கிள்களை யாழ் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். [கொ]



## ஜே. பி. யாக நியமனம்

யாழ்ப்பாணம் பிரதான வீதியைச் சேர்ந்த செல்வி லில்லியன் அக்னஸ் அண்ணாசாமிப்பிள்ளை யாழ். மாவட்ட சமாதான நீதவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ். உயர் நீதிமன்றத்தில் இவர் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

காலஞ்சென்ற யாழ் பட்டின உடையார் எஸ். எவ். எக்ஸ் அண்ணாசாமிப்பிள்ளையின் கடைசி புதல்வியான செல்வி லில்லியன் அக்னஸ் யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடப் பாடசாலை, யாழ். வேம்படி மகளிர் உயர் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியாவார். மேல் நாட்டுச் சங்கீதத்தில் டிப்ளோமா பட்டதாரியான இவர், ஒரு சிறந்த டெனிஸ் வீராங்கனையுமாவார். யாழ் கோட்டை டெனிஸ் கழகத்தின் கௌரவ சமூகநலச் செயலாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார். இவர் சமூகசேவைகளில் ஈடுபாடு உடையவர்.

## சகலரும் வழிபடலாம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் ஆலயம் சமீபத்தில் சகலரும் ஆசாரசீலராகச் சென்று வழிபடுவதற்காகத் திறந்து விடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## யாழ். மாநகரசபை இன்று கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை கூட்டம் இன்று மாலை நகரசபை முதல்வர் திரு ஆர் விஸ்வநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இன்று நடைபெறும் கூட்டத்தில் 40 பிரேரணைகள் பிரேரிக்கப்படவிருக்கின்றது.

## வேலைநிறுத்தம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களைச் சந்தித்து அவர்களுக்கு இயக்குநர்சபை எடுத்த முடிவுகள் மெச்சத்தக்கதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதும் என்று விளக்கப்படுத்தியும் பிரதிநிதிகள் தொண்டிச்சாட்டுகளை முன்வைத்து தொடர்ந்தும் வேலைநிறுத்தம் செய்வது விசனத்துக்குரியது.

"ஊழியர் வேலைநிறுத்தம் தொடர்ந்தும் ஏன் நடைபெறுகிறது என்பது இயக்குநர் சபைக்கும், கூட்டுறவு இலாகா உத்தியோகத்தர்களுக்கும் வியப்பாக இருக்கிறது. பாவனையாளர் படும் கஷ்டத்தை சகிக ஊழியர்கள் மிகவும் உதாசீனம் படுத்துவது மிகவும் வருந்தத்தக்கது.

இவ்வேலைநிறுத்தம் வெளியாரின் சுயநல தலையீட்டுக்கு உடந்தையாக நடைபெறுகிறதென்றே பாவனையாளரும் மற்றும் வெளியாரும் பேசிக் கொள்கிறார்கள்"

## மூன்று புதிய....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மான 'ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்' முற்றாக எரிந்துள்ளது. இக்கடைக்கு அருகேயுள்ள 'அ. சி. பழனிவேலு அன்ட் சன்ஸ்', 'ஜமுக ஸ்ரோர்ஸ்' ஆகியவைகளும் எரிந்துள்ளன இக்கடைகளுக்கு பின்பகுதியிலுள்ள மூன்று கடைகளின் கூரைகளும் சேதமடைந்துள்ளன.

முதலில் ஸ்ரீ அம்பாள்ஸ்ரோஸிலிருந்தே தீ பரவியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினமிரவு சுமார் 11-30 மணியளவில் கடைகள் எரியத் தொடங்கியதாகவும் அயல்கடைகளிலுள்ள சிலரும் பாதுகாப்பு உத்தியோகத்தரும் தீயை அணைக்க முயற்சித்ததாகவும், பின் தகவல் கிடைத்து பொலிஸாரும் அவ்விடத்திற்கு வந்து பொதுமக்களின் உதவியுடன் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததாகவும் கூறப்படுகிறது'

பிரதிப் பொலிஸ் அதிபர் திரு ஹேரத், குற்றத்தடுப்புப் பகுதி இன்ஸ்பெக்டர் தலைமையில் வந்த பொலிஸ்கோஷ்டியினர் தீயை அணைப்பதில் மும்முரமாக ஈடுபட்டனர். சிறிதுநேரத்தில் பெருங்கூட்டம் அவ்விடத்தில் கூடி தீயை மற்றும் கடைகளுக்குப் பரவவிடாமல் அணைக்க உதவி செய்தனர்.

பொலிஸ் அதிபர் லியோ பெரேரா சம்பவம் நடந்தஇடத்திற்கு நேரில் வந்து நிலைமைகளை அவதானித்து தேவையான உதவிகளைச் செய்தார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். கடையொன்றில் சுவாமிபடத்திற்கு ஏற்றிய தீபத்திலிருந்து தீ பிடித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

நகரமுதல்வர் திரு ஆர் விஸ்வநாதன், மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் அவ்விடத்திற்குச்சென்று எரிந்த கடைகளைப் பார்வையிட்டனர்.

இன்று நடைபெறும் மாநகரசபைக் கூட்டத்தில் இச்சம்பவம்பற்றி பிரஸ்தாபிக்கப்படும் எனத் தெரியவருகிறது. [ஈ]

## தனியார்துறை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனங்களில் அமைக்கப்படும் இச்சபைகளில் ஊழியர்கள் தம் சொந்த விருப்பத்தின்பேரில் சேர்ந்துகொள்ளலாம்; கட்டாயமில்லை சம்பளத்திலிருந்து கடன்கள் கழிக்கப்படும் இச்சபைகளின் நிர்வாகத்துக்குத் தெரிவு செய்யப்படுகிறவர்கள் சூதாட்டம், மது ஒழிப்பு முயற்சிகளிலும் ஈடுபடுவார்கள்

லேடி லோர் நிதி நிறுவனத்தின் ஆதரவில் 77 நாடுகளில் இவ்வாறான கடன் வழங்கும் சபைகள் நிறுவப்பட்டுள்ளன

## ஜனாதிபதிக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருதடவை ஐ நா. பொதுச்சபையில் அனுமதியின்றி நுழைந்து மேடையில் ஏறி தமிழ் ஈழம் பற்றிப் பேசியவர் என்பது தெரிந்ததே. [ம]

## குருசாமி கொலை இளைஞர்கள்மீது விசாரணை

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் இன்ஸ்பெக்டர் குருசாமி படுகொலை தொடர்பாக வண்ணார்பண்ணை மேற்கைச் சேர்ந்த பல இளைஞர்கள் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இன்ஸ்பெக்டர் குருசாமி கொலைசெய்யப்பட்ட அன்று அவர்வீட்டுக்கு எதிரிலுள்ள வீட்டில் ஒலிபெருக்கியைப் பாவித்த இளைஞன் உட்பட அன்று அவருக்குத் துணையாகச்சென்ற இளைஞர்களையும் பொலிசார் விசாரணைக்குட்படுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

கொழும்பில் இருந்து வந்த பொலிசாரும். யாழ். பொலிசாரும் இக்கொலைச் சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர். [கொ]

## மரண அறிவித்தல்

### செல்வி மதியாபரணம் பாலாம்பிகை

செல்வி மதியாபரணம் பாலாம்பிகை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற மதியாபரணம் இரத்தினம் தம்பதிகளின் அருமை மகளும், குணரத்தினம் (இளைப்பாறிய கட்டிட பரிசோதகர்). விஜயரத்தினம் (இலங்கை வங்கி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். பூதவுடல் இன்று (6-7-79) வெள்ளிக்கிழமை தகனக்கிரியைக்காக காலை 9 மணியளவில் 51, அரசடி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் [2973]

## மரண அறிவித்தல்

### இ. சி. கணேசரத்தினசிங்கம்

மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தான தருமகர்த்தா இ. சி. கணேசரத்தினசிங்கம் இறைவனடி எய்தியுள்ளார்

ஈமச்சடங்குகள் 7-ம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும்.

சமூகஜோதி, C. தியாகராசா வீதி,
மானிப்பாய். 2964

## மரண அறிவித்தல்

### திருமதி. டி. சி. இராஜசுந்தரம்

சாவகச்சேரி, தேவாலய வீதியைச் சேர்ந்த திருமதி டி. சி. இராஜசுந்தரம் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. டி. சி. இராஜசுந்தரத்தின் அன்பு மனைவியும் திருமதி எஸ். கி. இராஜரட்ணம், ஆர். அற்புதராஜா ஆகியோரது அன்புத் தாயாரும், இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் ஏ. சுப்பிரமணியத்தின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 16, தேவாலய வீதி, சாவகச்சேரி இல்லத்திலிருந்து நாளை 7-7-79 மாலை 4-30 க்கு சாவகச்சேரி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். 2977

## மரண அறிவித்தல்

### செல்வன் சோ. சிவகுமாரன்

யாழ். தொழில் நுட்பக்கல்லூரிக் கட்டிடக்கலை மாணவனும், யாழ்ப்பாணம் கன்னாதிட்டியைச சேர்ந்தவருமான செல்வன் சோ. சிவகுமாரன் அகால மரணமானார்.

இவர் கந்தவனம் சோமசுந்தரம் (யாழ். ப. நோ. கூ. ச. களஞ்சியக் காப்பாளர்), திருமதி சோமசுந்தரம் ஆகியோரின் அன்பு மகனும், ஜெயக்குமார், நந்தினி, ராஜ்குமார் (சிங்கப்பூர்), உருத்திரகுமார் [சென்னை], சசிகுமார் [பரியோவான் கல்லூரி], ஜெய்நந்தினி, சூரியகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். ஈமக்கிரியைகள் இன்று 6-7-79 மாலை 4 மணிக்கு கிண்ணுன்றி மயானத்தில் நடைபெறும் உற்றார், உறவினர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 2976

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி [illegible] இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanadu P B No 49, Telegrams: Eelanadu Phone: 289.